




வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் நடைபெறவுள்ள அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (25.6.2025) சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாகமாக வழியனுப்பி வைத்தார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூரில், மாவட்டக் கழக அவைத் தலைவரும், கழக தணிக்கை குழு உறுப்பினருமான தி.அ.முகமது சகி அவர்களின் சகோதரரும், வேலூர் முன்னாள் துணை மேயருமான தி.அ.முகமது சாதிக் அவர்கள் அண்மையில் மறைவெய்தியதையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் உடனிருந்தனர்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், வி.என். நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற பாக நிலை முகவர்கள் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது, கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக, கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், தொகுதிப் பார்வையாளர்கள் கதிரவன், மணிராஜ், மருத்துவர் அண்ணாமலை, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாநில நிர்வாகி செந்தில், திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் பாக நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.



புதுதில்லியில் ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களை நேற்று முன்தினம் (25.06.2025) தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேரில் சந்தித்து, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூபாய் 2670.64 கோடி நிலுவை நிதியை உடனடியாக வழங்கவும் நியாய விலைக் கடைகளில் எடைபோடும் இயந்திரத்தை கை விரல் ரேகை பதிவு செய்யும் கருவியுடன் இணைத்து பொருட்கள் வழங்குவதால் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏற்படும் காலதாமதத்தை தவிற்கும் வகையில் நடவடிக்கை எடுத்திடவும், இணைப்பு முறையை அமல்படுத்திட 31.03.2026 வரை கால நீட்டிப்பு வழங்கவும், தமிழ்நாட்டிற்கு இந்திய உணவுக் கழகம் வழங்கும் அரிசியினை முழுவதுமாக புழுங்கல் அரிசியாக ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலத் தொகுப்பில் இருந்து வழங்கவும், தமிழ்நாட்டில் இருந்து 2024–25 காரிஃப் பருவக் கொள்முதல் அளவை 16 இலட்சம் டன்னிலிருந்து 19.24 லட்சம் டன்னாக உயர்த்திடவும், ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி. என்.சிவா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்ய பிரத சாகு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் பா. முருகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் மா விவசாயிகளின் நலனைக் காத்திடும் வகையில், மாம்பழ விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய சந்தைத் தலையீட்டுத் திட்டத்தை (Market Intervention Scheme) செயல்படுத்திடகோரி ஒன்றிய வேளாண்மை – உழவர் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று முன்தினம் (25.6.2025) புதுதில்லியில் ஒன்றிய வேளாண்மை உழவர் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கி, இப்பிரச்சினைக்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி. என். சிவா, பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி. மதியழகன், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச்செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் பா. முருகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை கொரிய குடியரசின் துணை தூதரகத் தலைவர் Mr.Changnyun Kim, தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வது குறித்து கொரியா Exim Bank General Mr. Kisang Kim, Mr. Dae Hee Kim, (Director) and Mr. Sae Hwan, (Loan Officer) ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள்.



தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களை நேற்று முன்தினம் 25.06.2025 புதியதாக பொறுப்பேற்கவிருக்கும் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கா.பொற்கொடி மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

## பண்ருட்டி ஒன்றியத்தில் பாராட்டு விழா!

பண்ருட்டி, ஜுன் 27-

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பாக பண்ருட்டி ஒன்றியத்தில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா ஒன்றிய தலைவர் இரா.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு மெடல் வழங்கி வாழ்த்தினார்.

மாநில பொதுச்செயலாளர் மன்றம் சண்முகநாதன், மாநிலத் தலைவர் பெ. இரா. இரவி, பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் சுமதி நந்தகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சி.அருள்பிரகாசன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் ராஜேந்திரன், துணை அமைப்பாளர்கள் ம.குமார், செந்தில்குமார், மகளிரணி அமைப்பாளர் பத்மாவதி, ராஜாராம், பொருளாளர் த.ஜெகதீசன் நன்றி கூறினர்.



திருவெறும்பூர் தொகுதி மண்டலம் மூன்றின் 16 வது வார்டில் விஸ்வாஸ் நகரில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மாநகராட்சி பொது நிதியிலிருந்து நான்கு லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் மாமன்ற உறுப்பினர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட சின்டெக்ஸ் பைப்புடன் கூடிய தண்ணீர் தொட்டியை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள் உதவி ஆணையர் சரவணன், உதவி செயற்பொறியாளர் ஜெகஜீவராமன், இணைப் பொறியாளர் ஜோசப் மற்றும் கழக நிர்வாகிகள், நகர் நலச் சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.